இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 05.12.2025

# சந்தேக செயலி!

பா.ஜ.க. எதைச் செய்தாலும் சந்தேகத்துக்கு உரியதுதான். அந்த வரிசையில் ‘சஞ்சார் சாத்தி’ செயலி வந்துள்ளது. சொந்த நாட்டு மக்களை உளவு பார்க்க இதனை நுழைக்க இருக்கிறார்கள்.

புதிதாக விற்பனைக்கு வரும் ஸ்மார்ட் செல்பேசிகள் அனைத்திலும் ‘சஞ்சார் சாத்தி’ செயலியைப் பொருத்த வேண்டுமாம். அதனை அந்த செல்போன் நிறுவனங்களே பொருத்த வேண்டுமாம். ஒன்றிய பா.ஜ.க. அரசின் உத்தரவு இது. இந்தியாவில் விற்பனை செய்யப்படும் அனைத்து புதிய செல்போன்களிலும் 90 நாட்களுக்குள் இந்தச் செயலியை தயாரிப்பு நிறுவனங்களே நிறுவி இருக்க வேண்டும் என்று சொல்லி 2026 பிப்ரவரி மாதம் வரை கெடுவும் விதிக்கப்பட்டுள்ளது.

ஒரு செயலி, ஒவ்வொரு செல்போனிலும் கட்டாயம் இருக்க வேண்டும் என்று சொல்வது இதுவே முதல் முறையாகும்.

“தொலைத்தொடர்புத் துறை, நிதி மோசடி அபாயம் குறித்த தகவல் வழங்கும் நடவடிக்கையையும் செயல்படுத்தியுள்ளது. இது நிதி மோசடி அபாயத்துடனான அவற்றின் தொடர்பின் அடிப்படையில் மொபைல் எண்களை மதிப்பிட்டு வகைப்படுத்துகிறது. இந்தக் கருவி - வங்கிகள், வங்கிசாரா நிதி நிறுவனங்கள், யு.பி.ஐ. சேவை வழங்குநர்கள் போன்றோர், நுகர்வோரைப் பாதுகாப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க உதவுகிறது” என்று ஒன்றிய அரசு சொல்கிறது.

“2023 மே 16, 2023 அன்று தொடங்கப்பட்ட இணையதளத்தின் வெற்றியை அடுத்து 2025 ஜனவரி 17 அன்று சஞ்சார் சாத்தி (Sanchar Saathi) மொபைல் செயலி அறிமுகப்படுத்தப்பட்டது. இது தொலைத்தொடர்பு பாதுகாப்புச் சேவைகளை நேரடியாகவும் வசதியாகவும் அணுக அனுமதிக்கிறது. ஆண்ட்ராய்டு மற்றும் ஐ.ஓ.எஸ். தளங்களில் கிடைக்கும். இந்தச் செயலி, பயனர்கள் தங்கள் தொலைத்தொடர்பு அடையாளத்தைப் பாதுகாக்கவும், மோசடிகளுக்கு எதிராக விரைவான நடவடிக்கை எடுக்கவும் அதிகாரம் அளிக்கிறது.” என்றும் சொல்கிறது ஒன்றிய அரசு.

செல்போன் வைத்திருப்பவர்கள் இதனை நீக்க முடியாத அளவுக்கு இதைப் பொருத்தச் சொல்லி இருக்கிறார்கள். இந்த விதிமுறைகளைப் பின்பற்றாத செல்போன் நிறுவனங்கள் மீது தொலைத் தொடர்பு சட்டம் பாயும்.

செல்போன்கள் தொலைந்து போனால் கண்டுபிடிக்க இது உதவும் என்கிறார்கள். தொலைந்து போன செல்போனைக் கண்டுபிடிக்கவும், 16 இலக்க ஐ.எம்.இ.ஐ. அடையாள எண்களில் நடைபெறும் மோசடிகளைத் தடுக்கவும் என்று சொல்லிக் கொள்கிறார்கள்.

**‘திருடு போன போனைக் கண்டுபிடிப்பதற்காக அல்ல, தகவல்களைத் திருடவும் கண்காணிக்கவுமே இது உருவாக்கப்பட்டுள்ளது’ என்று சமூகச் செயற்பாட்டாளர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். ‘இந்தச் செயலிதான் அரசாங்கத்தின் கண்காணிப்பாளர்’ என்று அவர்கள் சொல்கிறார்கள். பெகாசஸ் போன்ற உளவு பார்க்கும் கருவியாக இதனை அவர்கள் பார்க்கிறார்கள். ‘அதிகாரப் பூர்வ பெகாசஸ்’ ஆக இதனை மாற்ற ஒன்றிய பா.ஜ.க. அரசு முயற்சிப்பதாகவே இதனை அவர்கள் பார்க்கிறார்கள்.**

செல்போன் நிறுவனங்களும் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் தகவல்கள் வெளியாகி உள்ளன. ஆப்பிள் நிறுவனம், “இது போன்ற செயலியைப் பொருத்தமாட்டோம்” என்று சொல்லி விட்டதாம். ‘சாம்சங்’ போன்ற நிறுவனங்கள், ஒன்றிய அரசின் முடிவை மறுபரிசீலனை செய்யச் சொல்லி இருப்பதாகச் செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்தியாவுக்காக மட்டும் இது போன்று தனித்துச் செயல்பட முடியாது என்று அவை முடிவெடுத்துள்ளன.

**“இது மக்களின் குரலை நெரிக்க பா.ஜ.க.வின் மற்றொரு முயற்சி. இது சர்வாதிகாரத்தைப் போன்றது. பா.ஜ.க.வின் கொடுங்கோல் ஆட்சியின் அடையாளம் இது” என்று சொல்லி இருக்கிறார் காங்கிரஸ் தலைவர் கார்கே. “மோடி அரசின் இந்த உத்தரவு, மக்களின் தனியுரிமை மீதான வெட்கக்கேடான தாக்குதல் ஆகும். உலகில் எந்த ஜனநாயக நாடும் இதனைச் செய்தது இல்லை. உடனடியாக இதனைத் திரும்பப் பெற வேண்டும்” என்று கோரிக்கை வைத்துள்ளார் ஆம் ஆத்மி தலைவரும் டெல்லியின் முன்னாள் முதலமைச்சருமான அரவிந்த் கெஜ்ரிவால்.**

**“சைபர் மோசடிகளைத் தடுக்க வேண்டும்தான். ஆனால் இந்தச் செயலி அனைவரது தனியுரிமையையும் பறிக்கிறது” என்று சொல்லி இருக்கிறார் காங்கிரஸ் எம்.பி.யான பிரியங்கா காந்தி. “ஒன்றிய அரசின் நடவடிக்கை மற்றொரு ‘பிக் பாஸ்’ கண்காணிப்புத் தருணம்” என்று உத்தவ் தாக்கரே கட்சி எம்.பி.யான பிரியங்கா சதுர்வேதி சொல்லி இருக்கிறார்.**

எதிர்ப்புகள் அதிகம் ஆனதும், ‘தேவையானால் வைத்துக்கொள்ளலாம், வேண்டாம் என்பவர்கள் நீக்கிக் கொள்ளலாம்’ என்று ஒன்றிய அரசு பின்வாங்கி உள்ளது. “சஞ்சார் சாத்தி செயலியை நீக்கிக் கொள்ள சுதந்திரம் உள்ளது. அவர்கள் அதில் பதிவு செய்யும் வரை அது செயலற்ற நிலையில் இருக்கும். சஞ்சார் சாத்தி செயலி மூலம் உளவு பார்க்கும் அல்லது அழைப்பு கண்காணிப்பு எதுவும் இல்லை” என்று ஒன்றிய தகவல் தொடர்பு அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா சொல்லி இருக்கிறார்.

“சஞ்சார் சாத்தி செயலியை முன்கூட்டியே நிறுவ வேண்டும் என்று செல்போன் தயாரிப்பாளர்களுக்கு பிறப்பிக்கப்பட்ட உத்தரவு திரும்பப் பெறப்பட்டு விட்டது” என்று தொலைத் தொடர்புத் துறை அறிவித்துள்ளது.

**குடியுரிமையற்றவர்களாக ஆக்க ‘குடியுரிமைச் சட்டம்’. வாக்குரிமைகளைப் பறிக்க ‘சிறப்பு வாக்காளர் திருத்தம்’. அந்த வரிசையில் மக்களைக் கண்காணிக்க இதுபோன்ற சந்தேக செயலிகள். சொந்த நாட்டு மக்களை வேட்டையாடுவதில் தான் பா.ஜ.க.வுக்கு எத்தனை சுகம்?!**

கடந்த ஆண்டு தேசிய வங்கியின் தமிழ்நாடு மண்டலம் – ரூ.50 ஆயிரம் கோடிக்கு மேலாக வியாபாரப் பரிவர்த்தனை செய்து – அகில இந்திய அளவில் முதலிடம் வகிப்பது கண்டு பெரு மகிழ்ச்சி!

# கழக அரசு இவ்வாண்டு பயிர்க் கடன் இலக்காக ரூ.20 ஆயிரம் கோடி நிர்ணயம்!

## “சர்வதேச கூட்டுறவு ஆண்டு - 2025” விழாவில் - அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பெருமிதம்!



**சென்னை, டிச.5 -**

**“சர்வதேச கூட்டுறவு ஆண்டு 2025” விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய, தமிழ்நாடுகூட்டுறவுத்துறைஅமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன்,”கழக அரசு இவ்வாண்டு பயிர்க் கடன் இலக்காக20ஆயிரம்கோடிரூபாயினை நிர்ணயம் செய்துள்ளது!” என்று அறிவித்தார்.**

இவ்விழாவில் அவர் பேசியதாவது :-

2025 ஆண்டை ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச கூட்டுறவு ஆண்டாக அறிவித்து உலகம் முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழாவினையொட்டி தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) இம்மாநாட்டினை சிறப்பாக ஏற்பாடு செய்து கொண்டாடுவது குறித்து பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இன்று தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) தனது 43வது வருடத்தில் அடியெடுத்து வைக்கிறது. இம்மாநாட்டினை ஏற்பாடு செய்த தமிழ்நாடு மண்டல அலுவலகத்தின் முதன்மை பொது மேலாளர் திரு. ஆர்.ஆனந்த் மற்றும்நபார்டுவங்கிகுழுவினருக்கு எனது அன்பான வாழ்த்துக்களை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவுக்கடன்சங்கம் இந்தியாவிலேயேமுதன்முதலாக நமது மாநிலத்தில் உள்ளதிருவள்ளூர்மாவட்டத்தில்உள்ளதிரூரில் கூட்டுறவு கடன் சங்கம் 1904 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது என்பது அனைவரும் அறிந்ததே... அதே ஆண்டுபெரியகாஞ்சிபுரம் நகரக்கூட்டுறவு வங்கியும், சென்னையில் டி.யூ.சி.எஸ் எனப்படும் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கமும் தொடங்கப்பட்டன. அன்று முதல் இன்று வரை கூட்டுறவு இயக்கம் தமிழ்நாட்டில் எண்ணற்ற வகையில் சேவைகளை உறுப்பினர்களுக்கும், பொதுமக்களுக்கும் வழங்கி சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

1980களில் கிராமப்புற கூட்டுறவு கடன் அமைப்பின் சிரமங்களை நபார்டு வங்கிநிவர்த்திசெய்து,கூட்டுறவு அமைப்பு முறை மற்றும் கிராமப்புற கூட்டுறவு வங்கி முறைகளை வலுப்படுத்துவதில் நபார்டு வங்கி ஆற்றிய பங்கு மிகவும் பாராட்டத்தக்கது.நபார்டு வங்கியானது, கூட்டுறவு வங்கிகளுக்கு மறுநிதி வழங்கி உதவியது மட்டுமில்லாமல், நிர்வாகத்தை மேம்படுத்தவும், மனிதவளத்தை வலுப்படுத்தவும், தொழில்நுட்பத்தைப் பின்பற்றவும், வணிகத் தயாரிப்புகளை மேம்படுத்தவும் மற்றும் சிறந்த வாடிக்கையாளர் சேவைகளை வழங்கவும்பலஊக்குவிப்புமானியங்கள் வழங்கியுள்ளது.

கடந்த ஆண்டு தேசிய வங்கியின் தமிழ்நாடு மண்டலம் ரூ.50 ஆயிரம் கோடிக்கு மேலாக வியாபார பரிவர்த்தனை செய்து அகில இந்திய அளவில் முதலிடத்தில் வகிப்பதைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

நடப்பு ஆண்டிலும் இதே முனைப்புடன் செயல்படும் என்பதில் எனக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு.

இவ்வாண்டு பயிர்க் கடன் இலக்காக ரூ.20 ஆயிரம்கோடிதமிழகஅரசு நிர்ணயம் செய்துள்ளது. குறுகிய கால பயிர்க் கடனுக்கான நிதியாக NABARD (ST SAO Concessional Finance) ரூ.3,730 கோடி (18.65%) அளவிற்குவழங்கியுள்ளது. இதனை 50% அளவிற்கு உயர்த்தி வழங்கினால், மாவட்டமத்தியகூட்டுறவு வங்கிகள்மற்றும்தொடக்க வேளாண்கூட்டுறவுகடன் சங்கங்கள் பயன்பெறும். 2030 ஆம் ஆண்டுக்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக வளர தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. மாநிலத்தின் தொலைநோக்குப் பார்வையை நனவாக்குவதில் விவசாயம் மற்றும் தொழிற்துறைகள் மிக முக்கிய மானவை. தமிழ்நாட்டின் கிராமப்புற வாழ்வாதாரங்களுக்கு விவசாயம் தொடர்ந்து முக்கிய பங்களிப்பை வழங்கி வருகிறது. “வறுமை இல்லாதது”, “பசி இல்லாதது” மற்றும் “நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு” ஆகிய நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு விவசாயத்தில்உற்பத்திமற்றும்உற்பத்தித்திறனை நிலையான முறையில்அதிகரிப்பதுமிக முக்கியம். கிராமப்புற இளைஞர்களின் திறன்களை மேம்படுத்துதல், முறையான கடன் அணுகல், மதிப்பு மற்றும் விநியோகச்சங்கிலி இணைப்புகளை உருவாக்குதல் மற்றும் கிராமப்புற MSME களுக்கான ஆதரவு ஆகியவை சீரான மற்றும் மீள்தன்மை கொண்ட கிராமப்புற பொருளாதாரத்திற்கு மிக முக்கியமானவை.

நமது கூட்டுறவுத் துறையின் சேவைகளாக மைக்ரோ ஏடிஎம்கள், PoS விற்பனை முனையங்கள், மொபைல்வேன்கள்,ஃபின்டெக் வசதி, கிராமப்புறங்களில் நிதி விழிப்புணர்வு முகாம்கள், வணிக முகவர்கள் வசதி, கூட்டுறவு பயிற்சி நிறுவனங்கள் மூலம் கூட்டுறவு சங்க பணியாளர்களுக்கு பயிற்சி உள்ளிட்டவைகளுக்கு, தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு வங்கிகளுக்கு நபார்டு நிதியுதவி வழங்குகிறதுஎன்பதுபெருமைக்குரிய ஒன்றாகும்.

கூட்டுறவு நிறுவனங்களை கணினிமயமாக்குதலில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. குறிப்பாக தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின் கணினிமயமாக்கல் திட்டத்தில்4532சங்கங்கள் ரூ.180கோடி செலவில்கணினிமயமாக்கப்பட்டு வருகின்றன. இது அவற்றின் செயல்திறனை அதிகரிக்கும் மற்றும் வாடிக்கையாளர்சேவைகளைமேம்படுத்தும் என்பதில் ஐயமில்லை. இதில் நபார்டு வங்கியின் பங்குபாராட்டுதலுக்குரியதாகும்.

கிராமப்புற உள்கட்டமைப்பை உருவாக்குவது வளர்ச்சியின் முக்கிய தேவைகளில் ஒன்றாகும். தமிழகத்தில் கிராமப்புற சாலைகள்,பாலங்கள்,நீர்ப்பாசனம், பள்ளி, கல்லூரிகள், பழங்குடியின மக்களுக்கான விடுதிகள், கால்நடை மருத்துவமனைகள் போன்றவற்றின் திட்டங்களை நடைமுறைப்படுத்த நபார்டு வங்கி இதுவரை ரூ.36,000 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாடு நாட்டின் இரண்டாவது பெரிய பொருளாதாரம் ஆகும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில், 2030ஆம் ஆண்டில் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற நாங்கள் இலக்கு நிர்ணயித்துள்ளோம், இவ்விலக்கை அடைவதற்கு தெளிவான வியூகம் வகுத்துள்ளோம். இவ்வளர்ச்சிப் பாதையில், சாத்தியமான அனைத்துத் துறைகளிலும்,வழிகளிலும் தமிழ்நாடு அரசுடன் இணைந்து செயல்பட நபார்டு வங்கிக்கு வேண்டுகோள் விடுக்கிறேன்.

இந்த43ஆண்டுகாலபயணத்தில், நபார்டு வங்கி, வேளாண்மை மற்றும் கூட்டுறவுஆகியவைபிரிக்கமுடியாத ஒன்றாகிவிட்டன. மாறிவரும்பொருளாதாரச் சூழல் மற்றும் பருவநிலை மாற்ற விளைவுகளில், விவசாயிகள், குறிப்பாக குறு விவசாயிகள்,கிராமப்புறப் பகுதிகள்அதிகளவில்பயன் பெறும் வகையில், நபார்டு வங்கியின் பங்கு மிகவும் முக்கியமானதுஆகும்.மாநிலத்திற்கும், இந்தியாவிற்கும் சாத்தியமான மற்றும் நிலையான தீர்வுகளைக் கண்டறிய நபார்டு வங்கி அனைத்துமுயற்சிகளையும் மேற்கொள்ளும் என்று நான் முழுமையாக நம்புகிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் உரையாற்றினார்.

தமிழ்நாட்டு விவசாயிகளின் நலன் காக்க – எங்கள் முதல்வரின் வேண்டுகோளையேற்று

# ஒன்றிய அரசு நெல்லின் ஈரப்பத சதவிகிதத்தை உடனே உயர்த்த வேண்டும்!

## மக்களவையில் – கழக உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி வலியுறுத்தல்!



**புதுடெல்லி, டிச. 5 -**

**நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் தொடங்கி நடைபெற்று வரும் நிலையில் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து இந்தியா கூட்டணி கட்சிகள் உரையாற்றி வருகின்றன**

**அந்த வகையில் நேற்று மக்களவையில் சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி நெல்லின் ஈரப்பதம் குறித்து கேள்விகளை முன்வைத்தார்.**

அப்போது அவர் குறிப்பிட்டதாவது,

வடகிழக்கு பருவமழையையொட்டி தமிழ்நாட்டின் டெல்டா பகுதிகளில் கனமழையை சந்தித்து வருகின்றோம். இதன் மூலமாக விவசாயிகள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றன. இந்த நிலையில் விவசாயிகள் பயிரிட்டுள்ள பயிர்கள் கொள்முதல் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்காக எங்களுடைய திராவிட மாடல் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பிரதமருக்கு கடிதம் எழுதினார். நெல்லின் ஈரப்பதத்தை 17% லிருந்து 22% மாக அதிகரிக்க வேண்டும் என்று அந்த கடிதத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருந்தார். இது தமிழ்நாட்டு விவசாயி களின் உண்மை நிலையை எடுத்துக் கூறுவதாக இருந்து வந்தது. இதை சோதனை செய்ய மூன்று மத்திய குழுக்கள் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதி களில் ஆய்வு மேற்கொண்டனர். இதனுடைய மாதிரிகளையும் அவர்கள் ஆய்வுக்கு எடுத்துச் சென்றார்கள்.

ஆனால் எப்போதும் தமிழ்நாட்டை ஒன்றிய அரசு வஞ்சிப்பதைப் போல இந்த முறையும் தமிழ்நாட்டினை ஒன்றிய அரசு வஞ்சித்துள்ளது. இதன் மூலமாக எங்களுடைய தமிழ்நாடு விவசாயிகள் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர். கடந்த காலங்களில் பல முறை ஒன்றிய அரசிடம் நெல்லின் ஈரப்பதத்தை அதிகரிக்க கோரியிருந்த நிலையில் அப்பொழுதெல்லாம் ஒன்றிய அரசு அதை ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால் இப்போது தமிழ்நாட்டின் கோரிக்கைகளை ஒன்றிய அரசு செவிசாய்க்க மறுக்கிறது, தமிழ்நாட்டையும் தமிழ்நாட்டு மக்களையும் ஒன்றிய அரசு நிராகரிக்கிறது. இதுபோல தமிழ்நாட்டு மக்களின் கனவு திட்டமான கோவை மற்றும் மதுரையில் மெட்ரோ ரயில் அமைய இருந்த நிலையில் அதையும் ஒன்றிய அரசு நிராகரித்துள்ளது.

ஒன்றிய அரசு தமிழ்நாடு அரசுக்கு வழங்கக்கூடிய கல்வி நிதியும் நிறுத்தப்பட்டுள்ளது. மகாத்மா காந்தி 100 நாள் வேலை திட்டத்தின் நிதியும் குறைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் பல்வேறு ரயில்வே திட்டங்களும் ஒன்றிய பா.ஜ.க. அரசால் நிறுத்தப்பட்டுள்ளது. இது போல தமிழ்நாட்டு மக்களை தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய அரசு தற்போது விவசாயிகளையும் வஞ்சித்து வருகிறது. தமிழ்நாட்டில் ஆளக்கூடிய தி.மு.க. அரசினை வஞ்சிப்பதாக ஒன்றிய அரசு நினைத்துக் கொண்டுள்ளது. ஆனால் இதன் மூலம் பாதிக்கப்படுவது தமிழ்நாட்டு மக்கள்தான் என்பதை ஒன்றிய அரசு ஒருபோதும் புரிந்து கொள்வதில்லை. எனவே விவசாயிகளின் நலனை காக்க எங்களுடைய கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தி.மு.க. சார்பில் ஒன்றிய அரசு உடனடியாக நெல்லின் ஈரப்பதத்தின் சதவீதத்தை அதிகரிக்க வலியுறுத்துகிறேன்.



கழகத்தின் மூத்த முன்னோடி, கழக முன்னாள் பொருளாளர் ஆர்க்காடு வீராசாமி அவர்களை, கழக கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.